DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC-52/2024

Prosecution witness – PW 1

| | | |
|---|---|---|
| Name | : திருமதி.நாகவள்ளி | Caste: |
| Father's Name | : | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

(Accused present.)

23.03.2026 - 01.35 PM

முதல் விசாரணை:-

1. நான் மட்டியரேந்தல் கிராமத்தில் குடியிருந்து துப்புரவு பணியாளராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும்.

2. கடந்த 29.05.2023ம் தேதி மாலை 04.45 மணியளவில் நான் இந்திரா நகரில் எனது வீட்டிலிருந்தேன். அப்போது ஆஜர் எதிரியான பாலசுப்பிரமணியன் மதுபோதையில் வந்து என்னை பார்த்து வந்தவெட்டி, புண்டா மகளே உன்னை அடித்து ஓட வைக்கிறேன்டி என்று ஆபாசமாக பேசி காரி துப்பினார். நான் போக முற்பட்ட போது ஆஜர் எதிரி என்னை மறைத்து, "நான் பேசிக்கொண்டிருக்கிறேன் எங்கடி போகிறாய்" என்று கேடுக்கெட்ட முன்ட என்று திட்டினார்.

3. எனது மாமியார் பூச்சரம் ஆஜர் எதிரியிடம் தன்னிய போட்டுவிட்டு பொம்பளையிடம் எதற்கு தகாத வார்த்தைகாளால் பேசினாய் என்று கேட்டார். பின்பு அவர் சென்றபின்பு ஆஜர் எதிரி என்னை தலை முடியை பிடித்து இழுத்து, கீழே போட்டு, நெஞ்சில் ஏறி மிதித்து கட்டையை எடுத்து எனது முதுகில் அடித்து எனது முடியை பிடித்து சுற்றி கீழே தள்ளிவிட்டார். பின்பு என்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலைமிரட்டல் விடுத்தார்.

4. கோவிந்தன், காளியம்மாள், சத்தீஸ்வரி, பூச்சரம் ஆகியோர் எதிரியை விலக்கிவிட்டனா். பின்பு 108 ஆம்புலன்ஸ் மூலம் இராமநாதபுரம் அரசு

மருத்துவமனையில் சிகிச்சைக்காக நான் சேர்ந்தேன். சிக்கல் காவல்நிலைய சார்பு ஆய்வாளர் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு வந்த போது அவரிடம் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும். புகார் வாக்குமூலத்தில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: –</u>**

எதிரி ஆஜர் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை இல்லை.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.03.23 18:32:38 +0000